SACRED HEART COLLEGE (AUTONOMOUS)
Tirupattur - 635 601
Tamil Nadu, India.
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 33. TML1172 - சங்க காலம் முதல் தற்காலம் வரை பெண்கள்

ப. நதியா
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஸ்ரீ வாசவி கல்லூரி சுயநிதிப் பிரிவு,
ஈரோடு –16.

## முன்னுரை

"மங்கையராய் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா"1

பெண்களின் வாழ்க்கை நான்கு சுவருக்குள் ஆரம்பித்து நான்கு சுவருக்குள் முடிந்து விடுகிறது. ஆரம்ப காலங்களில் பெண்கள் பணிந்து வாழும் பண்பு அவர்கள் மனதில் பசுமரத்தாணி போல பதிந்து விட்டது. பெண்கள் இதுவரை அப்படியே வாழ பழகி விட்டனர் பணிந்து,அடக்க, ஒடுக்கத்தோடு வாழ்வதே பெண்களின் சிறந்த பண்பு என பெண்களே கருதுகின்றனர் இந்த நிலைமையை வரலாறுகளும் பதிவு செய்துள்ளன. கோட்பாடுகள் என்பது வேலைக்கு பொருந்துமே தவிர வாழ்க்கைக்கு பொருந்தாது இதனை உணர்ந்தால் மனிதர்கள் வாழ்வு சிறக்கும் குறிப்பாக பெண்களின் வாழ்வு சிறப்பாக இருக்கும் இன்றைய காலகட்டத்தில் பெண்கள் சுதந்திரமாக செயல்பட்டாலும் பல இன்னல்கள் அவர்களை மீறியும் நடந்து கொண்டு தான் இருக்கிறது. பெண்களின் வீரம் திறமை,மன உணர்வு,கட்டுப்பாடு, தன்மானம், இன்னல்கள் போன்ற திறன்களை இக்கட்டுரை ஆராய்கிறது.

## பெண்மை– விளக்கம்:–

Femina என்ற இலத்தின் மொழிச் சொல்லிலிருந்து தான் Feminism என்ற ஆங்கிலச் சொல் வந்தது. திமீனீவீஸீஊனீ என்ற சொல்லுக்கு தமிழில், பெண்ணியம், பெண்ணிலைவாதம், பெண் நிலை ஏற்பு மகளிரியல் என்று பல்வேறு பெயரில் வழங்கப்படுகின்றன. பெண்களின் மனோபாவம், மாண்புகள், மன உணர்வுகள், தியாகம், பொறுமை இவற்றை பற்றி கூறும் போது பாரதிதாசன் அவர்கள்.

"ஆடை அணிகலன் ஆசைக்கு வாசமலர்
தேடுவதும் ஆடவர்க்குச் சேவித்திருப்பதும்
அஞ்சுவதும் நாணுவதும் ஆமை போல் வாழ்வதும்
கெஞ்சுவதும் மாகக் கிடக்கும் மகளிர்குலம்" – என்கிறார்.

சங்க மகளிர் தன்னுடைய அறிவுத்திறனை பயன்படுத்தி அகத்தையும் புறத்தையும் அதாவது இல்லறத்தையும் சமுதாயத்தையும் சிறந்த முறையில் நெறிப்படுத்தி ஆளும் தன்மையினை மகளிரின் அறிவாண்மை என அமைக்கலாம். அன்பு, அறிவு, பொறுமை, விருந்தோம்பல், குடும்ப நிர்வாகம், மனதின்மை, கணவர் மற்றும் குழந்தைகளை பேணுதல் என பல நிலைகளில் பெண்களின் தன்மை வெளிப்படுத்துகின்றன. பெண்கள் குடும்பத்தின் ஓர் அங்கமாகவும் சமூக உருவாக்கத்திற்கு காரணமாகும் அமைகின்றனர். சங்க இலக்கியங்களில் பெண்கள் மணம் ஆவதற்கு முந்தைய நிலையில் 'மகள்' என்ற சொல்லும் மணமான பின் 'மகளிர்' 'பெண்கள்' என்று சொல்லாலும் குறிக்கப்படுகின்றனர்.

## மகள் என்ற சொல்லானது

"பேதை அல்லை மேதையங் குறுமகள்"2

"பொன்னேர் புதுமலர் வேண்டி குறுமகள்"3 என்றும்

மகளிர் பெண்கள் என்ற சொல் வழக்கு

"மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"4

என்ற சான்றுகளின் வழி மகள், மகளிர், பெண்கள் என்றும் சொல் பயன்பாட்டினை அறிய முடிகிறது.

**பெண்களின் பண்புகள்**

*பெண் என்பவள் அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு முதலியன குணங்களைப் பெற்று இருக்க வேண்டும் என்று சான்றோர்கள் பலர் எண்ணினர்.*

''பெண்மை என்பது அடக்கம் பொறுமை தியாகம்
பரநலம் இரக்கம் அலகு ஒப்புரவு தொண்டு
முதலியன அமைந்த ஒன்றாகும் இவை பெண்
சேர்ந்த உடலே பெண்மை ''5

*தமிழ் இலக்கணமான தொல்காப்பியம் தலைவியின் பண்புகளை பெண்ணுக்குரிய குணங்களாக இவை இவையே இருக்க வேண்டும் என்பதை களவியல் கூறியுள்ளது.*

''அச்சமும் நாணமும் மடமும் முந்துறத்த
நிச்சம் பெண்பாற்கு உரிய என்ப''6

*என அச்சம் நானும் ஏதும் அறியாதிருக்கும் மடமை ஆகிய பண்புகள் பெண்களுக்கு முன்னிலையில் நிற்பவை எக்காலத்துக்கும் பெண்களுக்கு உரியவை என உறுதிப் பொருளாக தொல்காப்பியர் குறிப்பிடுகிறார். சான்றோர்கள் மற்றும் சங்க இலக்கியங்கள், இலக்கணங்கள் கூறுகின்ற அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு அனைத்தும் பெண்களிடம் இருக்கு, பெண்களுக்கு மட்டும் உரியவை, எக்காலத்திலும் அவை பெண்களிடம் உள்ளன. ஆனால் பெண்களை மதிப்புடனும் மரியாதையுடனும் கற்புடனும் கண்ணியத்துடனும் நடத்துகிறார்களா? உடலாலும் உள்ளத்தாலும் உணர்ச்சிகளாலும் பெண்கள் இன்னல்களை அனுபவித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள், இந்த நிலை மாற வேண்டும் என்றால் எந்த இலக்கணம், இலக்கியம் மற்றும் சான்றோர்கள் இதற்கு பதில் கூறுவார்கள் யாரிடம் கேட்பது? எப்படி கேட்பது? பெண்களின் இந்த அடிமைத்தனத்திற்கும் சித்திரவதைக்கும் சிக்கல்களை தீர்ப்பதற்கு எத்தனை பெரியார், பாரதி வந்து தீர்ப்பு கூறுவார்கள்*

''மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையை கொளுத்துவோம்''

*சங்க கால பெண்கள் உயிரைக் காட்டிலும் சிறந்ததாக நாணத்தையும் நாணத்தைக் காட்டிலும் சிறந்ததாக கற்பையும் மதித்தனர்.*

''நன்றி சார்ந்த கற்போடு
எம்பாடு ஆதல் அதனினும் அரிதே''7

*கணவனே தன் தலைவன் என்ற மனத்தின்மையையும் அன்பும் ஒழுக்கம் மென்மையும் விருந்தினரை பாதுகாத்தலும் சுற்றத்தாரை மதித்தலும் பெண்ணுக்கென்றே உயரிய பண்பாக தொல்காப்பியர் கற்பியல் நூற்பா கூறுகிறது*

''கற்பும் காமமும் நட்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொருளையும் நிறையும் வல்லதின்
விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்''8

*இன்றைய நவீன காலத்து பெண்களிடம் எல்லா வகையான திறன்களும் உள்ளன. ஆனால் பெண்களுக்கு என்று சுயமரியாதையோடும் தன்மானத்தோடும் நல் ஒழுக்கத்தோடும் இருக்க சமூகம் விடுவதில்லை.*

**பெண் கல்வி**

*சங்க கால பெண்கள் இயல், இசை, நாடகம் என்னும் தமிழின் முத்துறையிலும் நல்ல தேர்ச்சி பெற்று விளங்கினர். நல்லிசை புலமை பெற்று பலர் சங்க காலத்தில் காணப்பட்டனர். ஆடவர்க்குரிய கல்வி வேறு பெண்களுக்குரிய கல்வி வேறு, பெண்கள் தம் குடும்பப் பணியில் பங்கு செய்யும் கல்வியினைப் பயின்றனர். பெண்களைப் பொறுத்தவரை அவர்கள் தம் குடும்பங்களுக்கு பல்கலைக்கழகமாகவும் அன்னையே பேராசிரியராகவும் திகழ்ந்தனர்.*

''கல்வியில்லா பெண்கள் களர்நிலம் ஒப்பாவர்–அங்கு
புற்கள் விளையலாம் நல்ல புதல்வர்கள் விளைய மாட்டார்கள்''9

*ஒரு பெண் கல்விக் கற்றால் அவளுக்கு பயன்படுவதோடு மட்டுமல்லாது அவளது குடும்பத்திற்கும் பயன்படும். ஏன் அவளது நாட்டுக்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் பெருந்துணையாக இருக்கும். இதனால் தான் "பெண்கள் நாட்டின் கண்கள்" என்றனர். பெண்கள் படிக்காத கல்வி இல்லை,*

வேலை பார்க்காத துறைகள் இல்லை, குடும்பத்திற்கு தேவையான சேவையினையும் தன்னிடம் உள்ள அறிவினையும் திறமையினையும் பயன்படுத்தி குடும்பத்தை வறுமை நிலைக்கு கொண்டு செல்லாமல் இருப்பதற்கே பணிக்கு செல்கிறார்கள், பெண் கல்வியின் மூலம் உயர்நிலையை அடைய முடியும். அதோடு குடும்பத்தை நல்ல முறையில் வைத்திருக்க உதவுவதோடு ஏழு பிறப்பிற்கும் பயன் கிடைக்கும். இதனால்தான் "ஆணும் பெண்ணும் சமம்" என்றார்கள். ஆண்கள் உடலால் மட்டுமே பலமானவர்கள். ஆனால், பெண்கள் உடலால் மட்டுமல்லாமல் மனதால் வலிமையினை உடையவர்கள். அதனால் தான், ஆணும் பெண்ணும் சமம் என்பதை தாண்டி ஆணுக்கு மேல் பெண் உயர்ந்தவள் என்றார்கள். இதனால் தான் பெண்களை பூமிக்கு பூமாதேவி என்றும், ஆறுகளுக்கு கங்காதேவி என்றும் பெயர்களை சூட்டினார்கள். எதிரிகளிடமிருந்து போர் செய்து நாட்டைக் காப்பாற்றுவதில் வேலுநாச்சியார், ராணி மங்கம்மாள், அறிவியல் துறையில் விண்வெளியில் கல்பனா சால்வா, தொண்டு செய்வதில் அன்னை தெரசா, மருத்துவத்துறையில் முத்துலட்சுமி ரெட்டி, இலக்கியத் துறையிலும் விளையாட்டு துறையிலும் இதுபோன்ற எண்ணற்ற துறைகளில் பெண்கள் உயர் பதவிகளிலும் பெரிய பெரிய தொழில் நிறுவனங்களிலும் கால் பதித்து சாதனைகளையும் சோதனைகளையும் சந்தித்து வெற்றி கொண்டு திகழ்கிறார்கள்.

**பெண்ணின் பெருமை**

"பெண்ணின் பெருந்தக்கை யாஉள கற்பெனும்
திண்மைஉண் டாகப் பெறின்"10

இக்குறளில் கற்பு என்னும் கலங்கா நிலைமை மட்டும் அமைந்திருக்குமானால் [அக்கற்புடைய] பெண்ணை விட பெருமை உடையது. வேறு எவை உள்ளன என்று அன்றைக்ககே கற்பின் மேன்மையைப் பேசுகிறார். பாரதியார், பெரியார், பாரதிதாசன் போன்றோர் பெண்களின் அடிமைத்தனத்தை விடுத்து அவர்களது பெருமைகளை எடுத்துரைத்தனர். தன் பாடல், கட்டுரை, பேச்சு என்று அனைத்து வடிவத்திலும் வெளியிட்டு சமுதாயத்தில் ஓர் எழுச்சியையும் வேகத்தையும் தந்தார்கள். கல்வியை அடிப்படையாகக் கொண்டு ஆண், பெண், சமத்துவம், விதவை மறுமணம், பாலிய விவாக மறுத்து, கலப்பு மனம், பெண்களுக்கு சொத்துரிமை, ஒட்டுரிமை, பலதுறை ஈடுபாடு என்று பரந்துபட்ட பார்வையில் பெண்களிடம் மாற்றம் ஏற்பட்டது. விலகி வீட்டில் உள்ள அடுப்படியில் அடைந்து வாழ்வதை விடுத்து "நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சான் நெஞ்சம் படைத்த நிமிர்ந்த ஞானச் செருக்கும் வெற்றி திறக்க வேண்டும்" எனப் பாடினார். புதுமைப் பெண் பாரெங்கும் பவனி வர வாழ்த்தினார். "உயிரினும் பெண்மை இனிதடா" என்று எடுத்துரைத்து அவர்களிடத்தில் பெண்கள் பற்றிய ஒரு உயரிய பரிமாணத்தை உருவாக்க முயன்றார்.

"எந்த தேசம் பெண்களை மதிக்கிறதோ
அந்த தேசம் உலகில் உயர்ந்த நிலையை அடையும்"11

பெண்கள் அவர்களின் மன உணர்வுகள், கற்பனைகள், செயலாக்கத்திறன், தலைமை பண்பு, மனக்குமுறல்கள், எதிர்ப்பு வாதங்கள், கண்டனங்கள், சந்தேகம், அவர்களின் திறமை, பொறுப்பு, ஞானம் நிறைந்த பெண் சமூகத்தை முன்னேற்றும் விதமாக அவர்களுக்கு ஒத்தாசையாக சமூகம் விளங்க வேண்டும். எந்த வீட்டில், கிராமத்தில், நாட்டில் ஒரு பெண்ணை மரியாதையாகவும் மதிப்புடனும் நடத்தப்படுகிறார்களோ அவர்கள் குடும்பம் மற்றும் நாடும் நல்ல முன்னேற்றத்தில் வளர்ச்சி பாதை நோக்கி செல்லும் என்பதில் ஏதும் ஐயமில்லை.

**பெண்களின் இன்றைய நிலை**

பெண்ணிடம் கற்பு வழிபட்ட பெண் அடிமையின் பரிணாமங்களை எடுத்துரைக்கிறது. கற்பு சமுதாயத்துக்கு தேவையில்லை என்று பெண்ணியம் பேசவில்லை. கற்பழித்த பெண்ணை சமுதாயம் குற்றவாளியாக பார்க்கக்கூடாது என வற்புறுத்தப்படுகிறது. அவள் மனிதபிமானத்தோடு அணுகப்பட வேண்டியவள் என்ற கருத்து உணர்த்தப்படுகிறது. பெண்ணிற்கு படிப்பில் ஆர்வம் இருந்தும் அதிகமான மதிப்பெண் பெற்றாலும் கூட அவளை மேற்கொண்டு படிக்க அனுமதிப்பதில்லை. அத்தடைகளைத் தாண்டியும் படிக்கச் சென்றால் கல்வி கற்க சென்ற இடத்தில் அவளை கற்பழித்து மானபங்கப்படுத்தி சீரழிப்பது ஏன்? இதில் வயது வேறுபாடு இன்றி கற்பழிப்பு நடைபெறுகிறது. பாலியல் வன்முறையில் அதிக அளவில் பெண்கள் பாதிப்படைகிறார்கள் இத்தகைய தடைகளைத் தாண்டி அவளுக்கு திருமணம் செய்து வைத்தால்

"தாலி கயிறுகளே தூக்குக் கயிறுகள் ஆகின்றன
தாம்பத்தியம் என்பதெல்லாம்
வெறும் கனவாய் போகிறது. [ எ –போ –38]

குடும்பம் நடத்த வேண்டிய இடத்தில் குக்கரில் துண்டு துண்டகளாக வேக வைக்கப்படுகிறாரள்

*ஏன்? எதனால்? இத்தனை கொடுமைகள் நிகழ்த்தப்படுகிறது. பெண்களுக்கு மட்டும் ஏன் இந்த அநீதி ஏற்படுகிறது. உடல் ரீதியாக தொடுதல் என்ற பாலியல் வன்முறை பணியிடங்களிலும் இடங்களிலும் பேருந்துகளிலும் சர்வசாதாரணமாக நிகழ்த்தப்படுவது ஏன்? பாலியல் கொடுமையில் பெண்களை போகப் பொருளாகவும் இன்ப நுகர்ச்சிக்கு மட்டுமே உரியவளாகவும் பெண்களை நடத்தப்படுவது இன்றைய நிலையாகும். பாலியலுக்கு பின் பெண்கள் மட்டும் தான் பாதிப்படைகின்றனர்*

''வாலிகத்தின் பூங்கொத்தில்
வருடல்கள்
தாலிகட்டும் முன்பு சில
தரிசனங்கள்
வேலையில்லா இளநிலத்தில்
விதைகள்''

*பெண்ணின் குணங்களை காட்டிலும் அவள் அங்கங்களை மிகைப்படுத்தி கிளிர்ச்சியூட்டி எழுதும் கோட்பாட்டை அன்று முதல் இன்று வரை உருவாக்கி வைத்துள்ளனர். உடலை காட்சிப்படுத்திய எழுத்துக்கள் உள்ளத்தை காட்சிப்படுத்த தவறிவிட்டன. பெண்கள் வீடுகளிலும் சரி, அலுவலகங்களிலும் சரி, பெரிய பெரிய நிறுவனங்களிலும் சரி, உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பற்பல இன்னல்களை சந்தித்து வருகின்றனர். இந்தியாவை பொருத்தமட்டில் பெண் என்பவர் வீட்டில் பணியாற்ற வேண்டும். பெண்கள் அடிமையாகவே நடத்தப்படுகின்றன. அவர்கள் வெளியில் சுதந்திரமாக நடமாடவோ, பணிக்கு செல்லவோ, பிறருடன் பேசவோ இந்த சமூகம் அனுமதிப்பதில்லை.*

**முடிவுரை**

*தமிழ்நாட்டை பொறுத்த வரைக்கும் சமூக மாற்றத்தை கொண்டு வர வேண்டும். அப்பொழுதுதான் பெண்களின் தாழ்வு மனப்பான்மையை மாற்றி வெற்றி அடைய இயலும். அப்பொழுதுதான் பாரதியார் கண்ட கனவை நினைவாக்க முடியும். இதை தனி ஒருவரால் மட்டும் மாற்றத்தை ஏற்படுத்த இயலாது. சமூகம் நினைத்தால் மாற்றத்தை கொண்டு வர இயலும் பெண்ணிய சிந்தனைவாதிகள், சமூக வலைத்தளங்கள், பத்திரிகைகள், ஊடகங்கள் நினைத்தால் மட்டுமே சாதிக்க முடியும் சரித்திரமாக மாற்ற இயலும்.*

''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம்'' – பாரதியார்

*பெண்மையை போற்றுவோம்!*

*பெருமையை பேணுவோம்!!*

**துணை நூற்பட்டியல்:–**

1 பெண்ணின் பெருமை, சாராத பதிப்பகம் ப.எ 161
2 வேங்கட சாமி நாட்டார் ந. மு – கயமனார், அகநானூறு, ப.எ –7
3 வேங்கடசாமி நாட்டார், நொச்சி நியமங்கிழார் ப.எ –52
4 பிரேமாஇரா. [உ.அ] குறுந்தொகை –பாலை பாடிய பெருங்கடுங்கோ ப.எ 135
5 பெண்ணின் பெருமை, சாராத பதிப்பகம் ப.எ 112
6 தொல்காப்பியம் களவியல், நூற்பா–1045
7 நற்றிணை, இனியமுது பதிப்பகம், சென்னை ப.எ 330
8 தொல்காப்பியம், களவியல், நூற்பா 1098
9 பாரதிதாசன், குடும்பவிளக்கு, ப.எ –22
10 திருக்குறள் குறள் எண் – 54
11 என்னுடைய போதி மரங்கள், திருமகள் நிலையம், ப.எ –38